# தமிழக முதல்வரும் கேள்விக்குள்ளாக்கப்பட்ட அவரது உடல்நிலையும் ஓர் ஆய்வு

**Dr.வீ.புகழேந்தி MBBS**
**Dr.ரா.ரமேஷ் MBBS**

**சூழல் பாதுகாப்பிற்கான மருத்துவர் குழு**

வெளியீடு: 16 பிப்ரவரி 2017

தொடர்புக்கு: Dr.வீ.புகழேந்தி MBBS,

8870578769, pugalv20@yahoo.com

| பொருளடக்கம் | | |
|---|---|---|
| எண் | தலைப்பு | பக்கம் |
| 1 | **முன்னுரை** | 5 |
| 2 | **இருளில் பாய்ந்த ஒளிக்கீற்று** | 6 |
| 3 | **உடல்நலக் கேடும், கண்டறியப்பட்ட நோய்களும்**<br>2016 செப்டம்பர் 22 ஆம் தேதியன்று இரவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது முதல்வருக்கு இருந்த உடல்நலக் கேடுகள் என்ன? மருத்துவர்களால் கண்டறியப்பட்ட நோய்கள் யாவை? | 7 |
| 4 | **அப்போல்லோ செய்திக்குறிப்புகளில் இல்லாத அதிமுக்கியத் தகவல்கள்** | 10 |
| 5 | **செயலற்றுப்போன இருதயமும், அதற்குக் கூறப்பட்ட காரணங்களும்** | 13 |
| 6 | **அப்போல்லோவின் தீவிர சிகிச்சைப் பிரிவில் கண்காணிப்புக் கேமரா இருக்கிறதா?** | 17 |
| 7 | **ஏன் இந்த அவசரம்?**<br>முதல்வரின் உடல் பதப்படுத்தப்பட்டதன் மீது எழும் கேள்விகள் | 19 |
| 8 | **மக்களும், முதல்வரின் உடல்நிலையும்** | 21 |

**சமர்ப்பணம்**

“ மறைந்த முதலமைச்சர் அறிஞர் அண்ணா உணவுக் குழல் புற்றுநோயால் பாதிக்கப்பட்டார். அதனை சரி செய்வதற்காக அவர் வெளிநாடு சென்றார். அவருக்கு கதிர்வீச்சு மற்றும் புற்றுமருந்து சிகிச்சைகள் கொடுக்கப்பட்டன. எனினும் அவரது பிரச்சினை சரியாகவில்லை. நாடு திரும்பிய அவருக்கு மீண்டும் பல மருத்துவ சிக்கல்கள் ஏற்பட்டன. அவற்றை அகற்றுவதற்காக மீண்டும் கதிர்வீச்சு சிகிச்சையையே அவர் மேற்கொள்ள வேண்டும் என்று வெளிநாட்டு மருத்துவர்கள் பரிந்துரைத்தனர். அவரது சிகிச்சையை மேற்பார்வையிட மாநிலம் தழுவிய மருத்துவர் குழு ஒன்று உருவாக்கப் பட்டது. அதில் பங்கேற்ற எங்கள் ஆசிரியர் Dr.R.சுப்பிரமணியம் அவர்கள் மறு கதிர்வீச்சு சிகிச்சை வேண்டாம் என்று எச்சரித்தார்."ஏற்கனவே பரிந்துரைக்கப்பட்ட கதிர்வீச்சின் உச்சபட்ச அளவினை அண்ணா பெற்றிருக்கின்றபடியால், அதனை மீண்டும் கொடுக்கக் கூடாது. மீறிக் கொடுத்தால் கடுமையான பின்விளைவுகளை அவர் சந்திக்க நேரிடும்” என்பதே அவரது எச்சரிக்கையின் சாரம். என்றாலும், வெளிநாட்டு மருத்துவர்களின் பரிந்துரையே நடைமுறைப் படுத்தப்பட்டது. Dr.R.சுப்பிரமணியம் அவர்களின் எச்சரிக்கை உண்மையாகியது. கதிர்வீச்சால் உருவான Pericarditis நோயால் அண்ணா தாக்கப்பட்டார். 1969 ஆம் ஆண்டு பிப்ரவரி 3 ஆம் தேதியன்று அவரது உயிர் பிரிந்தது.

இந்தச் செய்தியைத் தமிழ் நாட்டு மக்கள் அறிய மாட்டார்கள். ஏனெனில் அதனைப் பொதுவெளியில் வைத்து விவாதிக்க எவரும் முயற்சி மேற்கொள்ளவில்லை. இதனை நீங்கள் ஒருபோதும் மறக்கக் கூடாது. செய்த தவறுகளையே திரும்பச் திரும்பச் செய்து வாழ்வை வீணடிக்கக் கூடாது என்பதை நீங்கள் நினைவுகொள்ள வேண்டும்” என்ற அறிவுரையை எங்களுக்கு வழங்கிச் சென்ற, மக்கள் மீதும் மருத்துவத்தின்மீதும் காதல் கொண்ட எம் ஆசான் Dr.R.சுப்பிரமணியம் அவர்களின் நினைவுக்கு.

## முன்னுரை

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் தேதியன்று இரவு 11.30 மணிக்கு மாரடைப்பால் (Cardiac Arrest) சென்னை அப்போல்லோ மருத்துவமனையில் காலமானார் என்று அந்த மருத்துவமனை அதிகாரப்பூர்வமாக அறிவித்தது. காய்ச்சல் மற்றும் நீர்ச்சத்துக் குறைவிற்காக செப்டம்பர் 22 ஆம் தேதி இரவு 10.30 மணியளவில் அந்த மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் இரண்டொரு நாட்களில் குணமடைந்து பணிக்குத் திரும்பிவிடுவார் என்று முதலில் கூறப்பட்டது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை. நாட்கள் வாரங்கள் - மாதங்களாகி அவரது சிகிச்சை நீண்டு கொண்டே போனது. இறுதியில் அவரது உடல் நிலை தேறிவிட்டது என்றும் அவரது உடல்உறுப்புகளனைத்தும் சீராகச் செயல்படுகின்றன என்றும் அவர் எப்போது விரும்புகிறாரோ அப்போது வீடு திரும்பலாம் என்றும் அந்த மருத்துவமனையின் தலைவரால் கூறப்பட்டது. எனினும், மருத்துவர்களின் தொடர் கண்காணிப்பின்கீழ் இருந்துவந்த அவருக்கு டிசம்பர் 4 ஆம் தேதியன்று மருத்துவர்கள் இருக்கும்போதே திடீரென்று அவரது இருதயம் செயலற்று நின்று விட்டது என்றும் அதனை சரி செய்ய பின்னர் எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் பலனளிக்கவில்லை என்றும் அவர் டிசம்பர் 5 ஆம் தேதி அன்று இரவு 11.30 மணிக்கு இறந்துவிட்டார் என்றும் அந்த மருத்துவமனையின் குறிப்பு தெரிவித்தது. பல ஆண்டுகளாக அவரை பாதித்துவந்த நோய்களின் காரணமே அவரைக் காப்பாற்ற முடியாமல் போய்விட்டது என்றும் அந்த மருத்துவக் குறிப்பு தெரிவித்தது.

அவரது இறப்பையோ அல்லது அதற்கு அப்போல்லோ மருத்துவமனையாலும், தமிழக அரசாலும் கூறப்பட்ட காரணங்களையோ எவராலும் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. அவர் மருத்துவமனையில் இருந்த 75 நாட்களின்போதும், அதனை அடுத்துவந்த நாட்களின்போதும் மருத்துவ ரீதியாக எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு திட்டவட்டமான பதில்களை அந்த மருத்துவமனையோ, தமிழக அரசோ கூறாத நிலையில், அவருக்கு சிகிச்சை அளித்த இரண்டு முன்னணி மருத்துவர்கள் மற்றும் இந்த சிகிச்சையை தமிழக அரசின் சார்பில் மேற்பார்வையிட்ட ஒரு மருத்துவர் ஆகியோரைக் கொண்டு தமிழக அரசு செய்தியாளர்கள் சந்திப்பு ஒன்றை 2017 பிப்ரவரி 6 ஆம் தேதியன்று சென்னையில் நடத்தியது. ஆனால், முதல்வர் அவர்களை அவர் மருத்துவமனையில் இருந்த 75 நாட்களின் போது சிகிச்சை செய்த மருத்துவர்களில் முக்கியப்பணியாற்றிய தில்லியைச் சேர்ந்த மூன்று AIIMS மருத்துவர்கள் இந்தக் குழுவில் பங்கேற்கவில்லை. மேலும், ஏற்கனவே முதல்வரை பாதித்திருந்த நோய்கள் அவரது இறப்பிற்குத் தூண்டுதலாக அமைந்தன என்று அவரது இறப்பு அறிக்கை கூறிய நிலையில், இந்த நோய்களையும் அவரது உடல்நிலையையும் தொடர்ந்து சிகிச்சை செய்தும் மற்றும் கண்காணித்தும் வந்த முதல்வர் அவர்களின் தனிப்பட்ட மருத்துவர் திரு.சிவக்குமார் அவர்கள் இந்தக் குழுவில் இல்லாதுபோனது மிகப்பெரிய குறையாக அமைந்தது. அதே நேரத்தில், முதல்வர் அவர்களின் உடலைப் பதப்படுத்திய உடற்கூறு இயல் மருத்துவர் இந்தக் குழுவில் பங்கேற்றதென்பது அனைவராலும் வரவேற்கத் தக்க ஒன்றாக இருந்தது. தமிழகத்தில்

நடந்த மிக முக்கியமான செய்தியாளர்கள் சந்திப்பான இந்த நிகழ்வில் எழுத்துப்பூர்வமான செய்திக் குறிப்பு வெளியிடப்படவில்லை என்பது அனைவரையும் ஆச்சர்யப்பட வைத்தது.

நிகழ்வில் கலந்துகொண்ட மருத்துவர் குழுவினரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள் முதல்வர் அவர்களின் உடல்நலம் மற்றும் சிகிச்சை குறித்து எழும் ஐயப்பாடுகளை நீக்கப் போதுமானதாக இல்லை என்பதே பெரும்பாண்மையோரின் கருத்தாக இருக்கிறது. இருப்பினும், இந்தக் குழுவினரால் அளிக்கப்பட்ட தகவல்கள் பல, இதுவரை பொதுவெளியில் அதிகாரப்பூர்வமா க வெளியிடப்படாதவை என்பதை எவராலும் மறுக்க முடியாது. முதல்வர் அவர்களின் உடல்நிலை மற்றும் சிகிச்சை குறித்தான விவாதத்திற்கு இந்தத் தகவல்கள் இன்றியமையாதவை என்பதே எங்களின் நிலைப்பாடு. இவையே, இந்த ஆய்வறிக்கையை உருவாக்கத் தூண்டுதலாக அமைந்தன என்றால் அது மிகையில்லை.

## இருளில் பாய்ந்த ஒளிக்கீற்று

முதல்வரின் மரணத்திற்குப் பிறகும்கூட அவரது உடல்நிலை மற்றும் இறப்பிற்கான காரணங்களை அறிந்துகொள்ளத் தேவைப்படும் அவசியமான எந்தவொரு தகவலையும் அப்போல்லோ மருத்துவமனையோ, தமிழக அரசோ, (அவருக்கு சிகிச்சை அளித்த AIIMS மருத்துவர்களின் மூலம்) மத்திய அரசோ பொதுவெளியில் வைக்க முன்வரவில்லை என்பதுதான் உண்மை நிலை. அப்படிப்பட்ட நிலையில், முதல்வரின் மரணத்திற்கு சுமார் 60 நாட்களுக்குப் பிறகு அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர்களின் ஒரு சாராரைக் கொண்டு தமிழக அரசு 2017 பிப்ரவரி 6 ஆம் தேதியன்று செய்தியாளர்கள் சந்திப்பு ஒன்றை திடீரென்று அறிவித்து , நடத்தியது. அந்த சந்திப்பில் பங்கேற்ற மருத்துவர்கள் வெளியிட்ட தகவல்கள் பல (அவை முழுமையாக இல்லாவிட்டாலும்கூட) இதுவரை பொதுவெளியில் வெளிவராதவை; முதல்வரின் உடல்நிலைக்கு ஏற்பட்ட கேடுகளையும், அவை எவ்வாறு கைகொள்ளப்பட்ட ன என்பது குறித்தும் அறிந்து கொள்ள பெரிதும் உதவுபவை.

Dr.பாலாஜி என்பவர் இந்த செய்தியாளர் சந்திப்பை முன்மொழிந்த ார். அப்போல்லோ மருத்துவமனையில் முதல்வர் அனுமதிக்கப்பட்ட அடுத்த நாளன்று அவருக்கு சிகிச்சை அளிக்கும் அனைத்து மருத்துவர்களையும் ஒருங்கிணைக்கு ம் பணியினை மேற்கொள்வதற்காகத் தமிழக அரசால் தான் நியமிக்கப்பட்டதாக அவர் கூறினார். இந்தச் செய்தியாளர் கூட்டத்திற்குத் தான்தான் தலைவர் என்று இங்கிலாந்தைச் சேர்ந்த Dr.ரிச்சர்ட் ஜான் பீலே அறிவித்தார். அப்போல்லோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் முதல்வருக்கு க் கொடுக்கப்பட்ட சிகிச்சைகளை விளக்குவதற்காக அந்த மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப்பிரிவின் மருத்துவரான Dr.பாபு ஏப்ரஹாம் என்பவரும் வந்திருந்தார். முதல்வரின் இறப்பிற்குப் பிறகு அவரது உடலினைப் பதப்படுத்துவதற்காக அப்போல்லோ மருத்துவமனைக்குத் தமிழக அரசால் அனுப்பப்பட்ட சென்னை மருத்துவக் கல்லூரியின் உடற்கூறியல் துறைத் தலைவரான Dr.சுதா சேஷய்யன் அவர்களும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டு இதுவரை வெளியிடப்படாத (முதல்வர் உடல் பதப்படுத்தப்பட்டது தொடர்பான) தகவல்களைப் பகிர்ந்து கொண்டார்.

# உடல்நலக் கேடும், கண்டறியப்பட்ட நோய்களும்

## 2016 செப்டம்பர் 22 ஆம் தேதியன்று இரவு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டபோது முதல்வருக்கு இருந்த உடல்நலக் கேடுகள் என்ன? மருத்துவர்களால் கண்டறியப்பட்ட நோய்கள் யாவை?

"முதல்வருக்கு வீட்டில் மூச்சுத் திணறல் ஏற்பட்டது. ஆம்புலன்ஸ் அழைக்கப்பட்டபோது அவரது மூச்சுத்திணறல் மேலும் அதிகமாகியது. அப்போல்லோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அவரை மருத்துவர்கள் பரிசோதித்தபோது அவரது மூச்சு மண்டலம் திடீரென்று செயலிழந்துபே ானதுதான் (Acute Respiratory Failure) அவருக்கு ஏற்பட்டுள்ள மூச்சுத் திணறலுக்கான காரணம் என்ற முதல்கட்ட முடிவுக்கு வந்தனர். திடீரென்று அவரது மூச்சு மண்டலம் ஏன் செயலிழந்து போக வேண்டும்? என்ற கேள்விக்கான பதிலை அவர்கள் தேடுகையில், கிருமித் தொற்றுதான் (Infection) அதற்கான காரணம் என்ற முடிவை எட்டினர். இந்தக் கிருமித் தொற்றானது சிறுநீரகம் அல்லது நுரையீரலில் துவங்கியிருக்கலாம் என்று கருதினர். இதனை உறுதி செய்வதற்கான பரிசோதனைகளை மேற்கொண்டபோது அவரது ரத்தத்திலேயே பாக்டீரியாக் கிருமித் தொற்று இருப்பதை அறிய முடிந்தது. இந்தக் கிருமிகள் அவரது இருதயத்தின் உள் அடுக்கில் குடிகொண்டு Endocarditis (இருதய உள்ளடுக்கு அழற்சி) என்ற பாதிப்பை ஏற்படுத்தியிருந்தன என்பதையும் அறிந்து கொள்ள முடிந்தது.

மேலும், இந்தக் கிருமித் தொற்றானது உடலின் நோய் எதிர்ப்புக் கட்டமைப்புகளையும் முடுக்கிவிட்டிருந்தது; அவை நோயை எதிர்த்ததோடு நிற்காமல் அவரது உடல் உறுப்புக்கள் பலவற்றையும் தாக்கத் தொடங்கியிருந்தன என்பதை அறிந்துகொண்டனர். இந்த செயல்பால்டே Sepsis என்று அழைக்கப்படுகிறது. இதுவே முதல்வரின் மூச்சு மண்டலத்தைத் தாக்கியிருப்பதையும் அதன் விளைவாகவே அந்த மண்டலம் திடீரென்று செயலிழந்து போயிருப்பதை யும் அவர்கள் அறிந்து கொண்டனர். இதன் காரணமே அவருக்குக் கடுமையான மூச்சுத் திணறல் ஏற்பட்டிருந்த து. கூடுதலாக, முதல்வருக்கு இருந்த பிற நோய்களான உயர் ரத்த அழுத்தம் மற்றும் சர்க்கரை நோய் ஆகியவையும் இந்தப் பிரச்சினைகளை சிக்கலாக்கின", என்பதுவே இங்கிலாந்து மருத்துவர் Dr.ரிச்சர்ட் பீலே அவர்கள் முதல்வர் அவர்களின் உடல்நலக் கேடு பற்றிப் பேசியதன் சாரமாகும்.

" அப்போல்லோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு முதல்வர் கொண்டுவரப்பட்டபோது அவர் அரைத்தூக்க நிலையில்(drowsy) இருந்தார். முதல் ஆறு நாட்களுக்கு மாஸ்க் மூலம் பிராணவாயுவைக் கொடுத்தோம். அதன்பிறகும் அவரது மூச்சுத் திணறல் குறையவில்லை; எனவே, அவரது மூச்சுக் குழாய்க்குள் செயற்கை மூச்சுக் குழாய் நுழைக்கப்பட்டு (intubate) செயற்கை சுவாசக் கருவியுடன் (ventilator) இணைக்கப் படவேண்டி வந்தது. இதன் பிறகும் கூட அவரது மூச்சுத் திணறல் குறையவில்லை. செயற்கை மூச்சுக்குழாய் நுழைக்கப்பட்டதற்கு 10 நாட்களுக்குப் பிறகு அவரது மூச்சுக் குழாயிலேயே துளைபோட்டு (Tracheostomy) செயற்கை சுவாசக் கருவியுடன் இணைக்கவேண்டிய நிலை ஏற்பட்டது." இதுவே Dr. பாபு ஏப்ரஹாம் அவர்களின் கூற்று..

“முதல்வர் அவர்களை மருத்துவமனை யில் அனுமதித்தபோது மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் கட்டுபடுத்தப்படா த சர்க்கரை நோய் மற்றும் சிறுநீர்த் தொற்று இருந்ததை அறிந்து கொண்டோம்,” என்றார் Dr.பாலாஜி.


இவர்கள் மூன்றுபேரும் கூறிய தகவல்கள் தமிழகப் பத்திரிகை களில் செப்டம்பர் 24 ஆம் தேதி தொடங்கி 30 ஆம் தேதிக்குள் வெளிவந்த பெரும்பாலான தகவல்களோடு ஒத்துப்போகின்றன என்பதை நாம் இங்கு கூறியே ஆக வேண்டும். இதே பத்திகைகளில் முதல்வர் அவர்கள் அப்போல்லோவில் அனுமதிக்கப்பப்டுவதற்கு சில தினங்களுக்கு முன்பாகவே காய்ச்சலால் அவதியுற்றார் என்ற செய்திகள் உள்ளன. செப்டம்பர் 21 ஆம் தேதியன்று அவரால் திறக்கப்படவிருந்த 107 அம்மா உணவகங்களுக்க ான திறப்புவிழா நிகழ்ச்சி காரணம் ஏதும் இன்றி ரத்து செய்யப்பட்டது என்பதுவும், அதே நாளில் மத்திய அமைச்சர்கள் கலந்துகொண்ட மெட்ரோ ரயில் துவக்க விழா நிகழ்ச்சியில் மிகவும் சிரமப்பட்டே கலந்துகொண்டார் என்பதுவும் அவருக்கு இருந்துவந்த உடல்நலப்பிரச்சினைகளால்கூட இருந்திருக்கக் கூடும் என்றே கருதத் தோன்றுகிறது. முந்தைய நாளன்று மெட்ரோ ரயில் துவக்க நிகழ்ச்சியில் சிரமத்துடன் கலந்துகொண்ட முதல்வர் மறுநாள் இரவு மயங்கிய நிலையில் மூச்சுத் திணறலுடன் அப்போல்லோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டதை ப் பார்க்கும்போது, இந்தப் பத்திரிகைகளில் வந்த செய்திகள் ஏன் உண்மையாக இருக்கக் கூடாது என்ற கேள்வி எழுகிறது. எனவேதான், அவருக்கு ஏற்கனவே இருந்து வந்த நோய்கள் குறித்தும், அவற்றை சிகிச்சை செய்வதில் இருந்த பிரச்சினைகள் குறித்தும், இதனைத் திறம்பட செய்யாமல் தாமதமாக மருத்துவமனை க்கு அவரை அழைத்துச் சென்றதே அனைத்துக் குளறுபடிகளுக்கும் காரணம் என்ற வாதத்தை மேம்போக்காகக் கடந்துசென்றுவிட முடியாது.

தமிழ் நியூஸ் 18 தொலைக்காட்சியின் தலைவரான திரு.குணசேகரன் அவர்கள் முதல்வர் அவர்களது தோழியான திருமதி.வி.கே.சசிகலா அவர்களை 2017 பிப்ரவரி 8 ஆம் தேதியன்று நடந்த நேர்காணல் நிகழ்ச்சியில் மருத்துவமனை க்கு முதல்வரைக் கொண்டுவருவதில் தாமதம் ஏற்பட்டதா என்ற கேள்வியை எழுப்பினார். அதற்கு, “தாமதமின்றி, உடனடியாகக் கொண்டுவந்துவிட்டீர்கள். அதனால் பிரச்சினை இல்லை என்று அப்போல்லோ மருத்துவர்கள் 23 ஆம் தேதி அதிகாலை 3 மணிக்கு என்னிடம் கூறினார்கள்” என்ற பதிலை திருமதி.வி.கே.சசிகலா அளித்துள்ளார்.

முதல்வரை மருத்துவமனைக்குக் கொண்டுசென்றதில் ஏற்பட்ட தாமதம் மற்றும் அதனால் ஏற்பட வாய்ப்புள்ள விளைவுகள் குறித்து செய்தியாளர் சந்திப்பின்போது பத்திரிகையாளர் ஒருவர் கேட்டபோது “முன்கூட்டி யே முதல்வரைக் கொண்டுவந்திருந்தால் அவரைக் காப்பாற்றி இருக்க முடியுமா என்பது அனுமானம் தொடர்பான கேள்வி; என்னால் அதற்கு பதிலளிக்க முடியாது; மேலும் எமது பணி முதல்வர் மருத்துவமனை க்கு வந்த பிறகே என்பதால், அதுகுறித்த கேள்விகளுக்கு மட்டுமே பதிலளிக்க முடியும்” என்று Dr. பாபு ஏப்ரஹாம் பதிலளித்தார்.

ஆனால், நோயாளி ஒருவரை மருத்துவர் ஒருவர் புதிதாகப் பரிசோதனை செய்யும்போது அந்த நோயாளியின் மருத்துவ மற்றும் உடல்நலம் குறித்த வரலாறு அனைத்தையும் மருத்துவர் சேகரித்தாக வேண்டும் என்பதுவும், இந்தத் தகவல்கள் அந்த நோயாளியின் சிகிச்சைக்கு இன்றியமையாதவை என்பதுவும் Dr. பாபு ஏப்ரஹாம் அவர்கள்

அறியாததல்ல. அப்போல்லோ மருத்துவர்களால் பதிவு செய்யப்பட்ட முதல்வர் அவர்களின் முந்தைய மருத்துவ வரலாற்றுத் தகவல்களையும், தீவிர சிகிச்சைப் பிரிவில் நடத்தப்பட்ட பரிசோதனை மற்றும் ஆய்வு முடிவுகளையும், முதல்வர் அவர்களை அவரது இல்லத்தில் சிகிச்சை செய்து வந்த மருத்துவர் சிவக்குமார் அவர்களின் மருத்துவக் குறிப்புகளோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போதே முதல்வர் அவர்களின் உடல்நிலை குறித்த உண்மையான தகவல்கள் வெளிப்படும்; மேலும், மருத்துவமனையில் அவரை சேர்ப்பதில் கால தாமதம்




ஏற்பட்டதா என்ற கேள்விக்கும் விடை கிடைக்கும். அப்போல்லோ மருத்துவமனையில் உலகத் தரமான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது என்றும், முதல்வருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை ஒரு திறந்த புத்தகம் என்றும் அந்த மருத்துவமனை நிர்வாகமே கூறிவருகிறது. அப்படி இருக்கும்போது Dr. பாபு ஏப்ரஹாம் அவர்களோ அல்லது அவரைச் சார்ந்தவர்களோ மேற்கூறிய தகவல்களை பொதுவெளியில் வைக்க ஏன் தயங்க வேண்டும்?

# அப்போல்லோ செய்திக்குறிப்புகளில் இல்லாத அதிமுக்கியத் தகவல்கள்

2017 பிப்ரவரி 6 ஆம் தேதி செய்தியாளர் சந்திப்பில் பேசிய மருத்துவர்கள் முன்வைத்த தகவல்களில் பெரும்பாலானவற்றை முதல்வரின் உடல்நிலை பற்றி பல்வேறு நாட்களில் அப்போல்லோ மருத்துவமனையால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்புகளில் காணமுடியவில்லை.

“அரைத் தூக்க நிலை, மூச்சுத் திணறல், மூச்சு மண்டல செயலிழப்பு, கிருமித் தொற்று, கிருமித் தொற்றால் தூண்டப்படும் உடலின் எதிர்வினைகளால் ஏற்படும் விளைவு (Sepsis), கட்டுப்படுத்தப்படாத சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்த பாதிப்பு, இருதய் உள் அடுக்கு அழற்சி (Endocarditis), எளிய பிராண வாயு சிகிச்சை, கிருமிகளைக் கண்டறியத் தேவையான பரிசோதனைகள்”, ஆகியவையே செப்டம்பர் 22 -29 ஆம் தேதிவரை நடந்த நிகழ்வுகள் என்று 6 பிப்ரவரி 2017 செய்தியாளர்கள் சந்திப்பில் கலந்துகொண்ட Dr.பீலே, Dr.பாபு ஏப்ரஹாம் மற்றும் Dr.பாலாஜி ஆகியோர் கூறினர். இந்தக் காலகட்டத்தை முதல் காலகட்டம் என்று அழைப்போம்.

ஆனால் அப்போல்லோ மருத்துவமனையால் இந்த முதல் காலகட்டத்தின்போது (செப்டம்பர் 22-29 ) முன்வைக்கப்பட்ட செய்திக் குறிப்புகளில் இவை எதுவும் இடம் பெறவில்லை. மாறாக “காய்ச்சல்; நீர்ச்சத்துக் குறைவு; பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன; சிகிச்சையால் உடல் நலம் நன்றாக முன்னேறிக்கொண்டிருக்கிறது; வழக்கமான உணவை உட்கொள்ளத் தொடங்கியுள்ளார்” , என்ற குறிப்புகளையே காணமுடிகிறது.

முதலாம் காலகட்டத்தின்போது “முதல்வர் அவர்களின் காய்ச்சல் குறைந்தது என்றும், ஆனால் அவரது மூச்சுத் திணறல் கூடுதலாகிப் போனது என்றும், அதனால் எளிய முறையில் அளிக்கப்பட்டுவந்த பிராணவாயுவிற்குப் பதிலாக, மூச்சுக்குழாய்க்குள் செயற்கை மூச்சுக்குழாயை நுழைத்து அதனை செயற்கை சுவாசக் கருவியுடன் இணைக்க வேண்டி வந்தது என்றும் (29 செப்டம்பர்)” மருத்துவர்கள் பிலே, பாபு மற்றும் பாலாஜி ஆகியோர் செய்தியாளர்கள் சந்திப்பின்போது கூறினர்.

ஆனால் அப்போல்லோ அறிக்கைகளோ இந்த முதலாம் காலகட்டத்தின்போது முதல்வரின் உடல்நலம் தொடர்ந்து முன்னேறிக் கொண்டிருந்தது என்றே தெரிவித்தன.

2016 செப்டம்பர் 30 இல் இருந்து அக்டோபர் 7 ஆம் தேதிவரை உள்ள காலகட்டத்தை இரண்டாம் கால கட்டமாகக் கொள்ளலாம். முதல்வரது மூச்சுக்குழாய்க்குள் செயற்கை மூச்சுக்குழாயை நுழைத்து அதனை செயற்கை சுவாசக் கருவியுடன் இணைத்ததில் இருந்து (endotracheal intubation) மூச்சுக் குழாயில் துளையிட்டு (Tracheostomy) அதனை செயற்கை சுவாசக் கருவியுடன் இணைக்கும் செயல்பாடு வரை உள்ள காலகட்டமே இது.

Apollo Medical Bulletins and Events

| Date | Apollo Bulletin Report | Procedures not mentioned in Apollo Reports | Events |
|---|---|---|---|
| **23 Sept 16** | Fever, Dehydration - Stable & Under Observation | | |
| **24 Sept 16** | Under Observation & Normal Diet | | |
| **29 Sept 16** | Responding well to treatment; Evaluation Test carried out; advised hospital stay for recuperative treatment. | Endotracheal Intubation | |
| **30 Sept 16** | | | Dr.Richard Beale arrives |
| **1 Oct 16** | | | Governor visits hospital; Briefed by Pratap Reddy. Visits the ward. Briefed by doctors about treatment given; Notes that the CM is recovering well |
| **2 Oct 16** | Continues to improve; Richard Beale's evaluation, concurrence with the present line of management on 30 Sept. Appropriate antibiotics and allied clinical measures to treat infection. Responding well to treatment; Advised few more days of hospital stay. | | |
| **3 Oct 16** | Appropriate antibiotics, Respiratory Support and other allied clinical measures to treat infection. Continues to improve. | | |
| **4 Oct 16** | Continues to improve; Same line of treatment; Under Close Observation; Advised further stay. | | |
| **5 Oct 16** | | | AIIMS Doctors arrive; Dr.Beale present. |
| **6 Oct 16** | Continues to improve; making gradual progress; Appropriate antibiotics, resort support and other allied clinical measures continued; Under observation of Intensivists, Cardiologists, Respiratory Physicians, Infectious disease specialists and diabetologists. Lab and radiology investigations continuously carried out. AIIMS doctors deliberate on 5 October after arriving. Stay till 7 Oct. Richard Beale examines once again. H/O Diabetes, Winter Bronchitis. Rep support, nebulisation, drugs to decongest lungs, antibiotics, nutrition, get.nursing care and supportive therapy. Try to be contined & advised longer hospital stay. | | |
| **7 Oct 16** | | Tracheostomy | |
| **8 Oct 16** | Constant monitoring by intensivists and consultants in the panel; respiratory support watched and closely adjusted; Passive physiotherapy started; No word on improvement for the first time. | | |
| **10 Oct 16** | Constant monitoring and same art. AIIMS Khilnani visits on 9, 10 October; discusses with expert panel. | | |
| **11 Oct 16** | | | OPS given charges of Jayas portfolios |
| **21 Oct 16** | Observation for all vital parameters, res support and physiotherapy; Patient interacting and progressing gradually. Signed by Dr N sathyabhama, DMS Apollo | | |
| **22 Oct 16** | | | Governor visits 2nd time |
| **4 Nov 16** | | | Apollo Chairman Dr.Reddy claims Jaya fully well |
| **4 Dec 16** | Cardiac Arrest | CPR, ECMO | |
| **5 Dec 16** | Death declared | | |
| **6 Dec 16** | | | Embalming - 12.20 am - 12.35 am<br>Buried - 6.30 pm |

இந்த இரண்டாம் காலகட்ட த்தின்போது - அதாவது அக்டோபர் 2, 3,4 மற்றும் 6 ஆம் தேதியன்று அப்போல்லோ மருத்துவமனை யால் வெளியிடப்பட்ட அறிக்கைகளில் - முதல்வரது உடல்நிலை தொடர்ச்சியாக முன்னேற்றம் அடைந்து வருவதாகவே கூறப்பட்டது. ஆனால் முதல்வருக்கு சிகிச்சை செய்த மருத்துவர்கள் பிப்ரவரி 6 ஆம் தேதியன்று இந்த காலகட்டத்தைப் பற்றிக் கூறும்போது முதல்வரின் மூச்சுத் திணறல் வெகுவேகமாக மோசமடைந்து கொண்டிருந்தது என்றனர்; இதன் காரணமே, செப்டம்பர் 29 ஆம் தேதியன்று செயற்கை மூச்சுக் குழாயை அவரது மூச்சுக் குழாய்க்குள் நுழைத்தும் பின்னர் அது எதிர்பார்த்த பலனைத் தராத காரணத்தால் அக்டோபர் 7 ஆம் தேதியன்று அவரது மூச்சுக்குழாய் துவாரமிடப்பட்டது என்றும் கூறினர்.

முதல்வருக்கு Endotracheal intubation மற்றும் Tracheostomy ஆகிய இடையீடுகள் மேற்கொண்டது குறித்து அப்போல்லோவின் அறிக்கைகள் வெளிப்படையாக எதுவும் கூறவில்லை. மாறாக, செயற்கை சுவாச உதவி (respiratory support) கொடுக்கப்பட்டுவருகிறது என்று அக்டோபர் 3, 4, 6 ஆம் தேதி அறிக்கைகள் பொத்தாம் பொதுவாகக் கூறின. மேலும், நோய்த்தொற்று க்கான மருந்துகள் கொடுத்துவருவதாகவும், அக்டோபர் 6 ஆம் தேதி அறிக்கையானது அவருக்கு இருக்கும் சர்க்கரை வியாதி மற்றும் குளிர்கால மூச்சுக் குழாய் அழற்சி (winter bronchitis) ஆகியவை அவரது உடல்நிலை யை மேலும் சிக்கலாக்கி வருவதாகவும் கூறின. மருத்துவமனையில் அதிக நாட்கள் தங்கி சிகிச்சைபெற வேண்டும் என்ற தகவலை அக்டோபர் 6 ஆம் தேதிக்கான அறிக்கையே முதல்முதலாகக் கூறியது. என்றாலும்கூட, அதற்கான காரணம் என்ன என்ற தகவல் அந்த அறிக்கையில் இல்லை. அதே அறிக்கையில், முதல்வர் அவர்களுக்குப் பல்வேறு ஆய்வகப் பரிசோதனைகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்ற தகவல் உள்ளது. என்றாலும், அதிலிருந்து பெறப்பட்ட முடிவுகளை வெளிப்படையாக முன்வைத்து முதல்வரின் உடல்நிலை தொடர்ச்சியான முன்னேற்றத்தையே அவை உறுதி செய்கின்றன என்பதை நிறுவவில்லை.

உயர் ரத்த அழுத்தத்தால் முதல்வர் அவர்கள் பாதிக்க ப்பட்டிருந்தார் என்ற தகவலை பிப்ரவரி 6 ஆம் தேதியன்று மருத்துவர்க ள் வெளியிட்டனர். ஆனால் அப்போல்லோ அறிக்கைகள் ஒன்றில்கூட இந்தத் தகவல் இல்லை.

இந்தக் காலகட்டத்தின் போதுதான், அதாவது அக்டோபர் 1 ஆம் தேதியன்று மாலை முதல்வரைப் பார்ப்பதற்காக தமிழக ஆளுனர் மருத்துவமனைக்கு சென்றார். அதுகுறித்து அன்றே அவர் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் முதல்வரின் உடல்நிலையில் சிகிச்சையின் காரணமாக நல்ல முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று கூறப்பட்டது. எனினும், அவரால் மத்திய உள்துறை அமைச்சர் அவர்களுக்கு டிசம்பர் 7 ஆம் தேதி அனுப்பப்பட்ட அறிக்கையில் முதல்வரின் உடல்நிலையானது அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட பின் ஒருவாரம் கழித்து (அதாவது செப்டம்பர் 29 ஆம் தேதியில் இருந்து) திடீரென மோசமாகியது என்ற தகவல் உள்ளது. ஏன் இந்த முரண்பாடு?

முதல்வரின் மூச்சுக் குழாய் துளையிடப்பட்ட நாளுக்கு அடுத்த நாளான அக்டோபர் 8 ஆம் தேதியில் இருந்து அவருக்கு மாரடைப்பு ஏற்பட்ட நாளான டிசம்பர் 4 ஆம் தேதிவரை உள்ள காலகட்டத்தினை மூன்றாம் காலகட்டம் என்று கொள்ளலாம். இந்தக்

காலகட்டத்தின்போது இரு தரப்பினரால் முன்வைக்கப்பட்ட தகவல்கள் பெரிதளவில் மாறுபடவில்லை.


## செயலற்றுப்போன இருதயமும், அதற்குக் கூறப்பட்ட காரணங்களும்


அப்போல்லோ அறிக்கைகளின்படியும், பிப்ரவரி 6 ஆம் தேதி நடந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்ட மருத்துவர்களின்படியும் அக்டோபர் மாத இறுதியில் இருந்தே முதல்வரது உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டு வந்தது. என்றாலும் கூட, டிசம்பர் 4 ஆம் தேதி மாலை சுமார் 4.30 மணி அளவில் அவரது இருதயம் திடீரென செயலற்றுப்போய், துடிப்பதை நிறுத்திக் கொண்டு விட்டது என்றும் அவர்கள் கூறினர்.

நின்றுபோன இருதயத்தை மீண்டும் செயல்பட வைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளனைத்தும் முதல்வருக்கு ஏற்கனவே இருந்துவந்த நோய்கள் காரணமாகவே (அவை என்ன என்பதை அந்த அறிக்கை தெரிவிக்கவில்லை) தோல்வியில் முடிந்த ன என்று அப்போல்லோ நிர்வாகத்தின் டிசம்பர் 5 ஆம் தேதிக்கான அறிக்கை கூறியது. இதுவரை நன்றாக இருந்து வந்த முதல்வரின் இருதயம் திடீரெ ன்று செயலிழந்து நின்றுபோனதற்கான (Cardiac Arrest) காரணம் தங்களுக்குத் தெரியாது என்று Dr.பீலேயும், Dr.பாபு ஏப்ரஹாமும் அடித்துக் கூறினார்கள். முதல்வரின் வயது, அவரது இருதயத்தைப் பாதித்திருந்த கிருமித் தொற்று, கிருமித் தொற்றினால் ஏற்பட்ட உடலின் எதிர் விளைவுகள், அவரைப் பல ஆண்டுகள் பாதித்திருந்த சர்க்கரை மற்றும் உயர் ரத்த அழுத்த நோய்கள் ஆகியவற்றால் ஒருவேளை இது நிகழ்ந்திருக்க லாம் என்றாலும் உறுதியாகக் கூற இயலாது என்று Dr.பீலே கூறினார்.

முதல்வரின் இருதயம் செயலிழந்து நின்ற பிறகு அதனை மீண்டும் இயங்கச் செய்யும் நடவடிக்கைகள் ( Cardio Pulmonary Resuscitation - CPR ) உடனடியாக எடுக்கப்பட்டது என்று Dr.பாபு ஏப்ரஹாம் கூறினார். இந்த நடவடிக்கை 20 நிமிடம் மேற்கொள்ளப்பட்டதாகவும், இறுதியில் அதனால் பலனில்லை (Refractory Cardiac Arrest - CPR நடவடிக்கைக்கு 15 நிமிடங்களுக்கு மேலும் இருதயம் செயல்படா து நிற்கும் நிலை) என்று அறிந்த உடனேயே, முதல்வர் அவர்கள் இருந்த அறையிலேயே தயாராக வைக்கப்பட்டிருந்த ( உடம்பிற்கு வெளியில் நுரையீரலாக செயல்பட்டு உடல் உறுப்புகளுக்குத் தேவையான பிராண வாயுவினை அளிக்கும்) ECMO (Extra Corporeal Membrane Oxygenation) கருவியுடன் முதல்வரின் ரத்த நாளங்கள் இணைக்கப்பட்டன என்றார்; அடுத்த 24 மணி நேரம் அந்தக் கருவி இயக்கப்பட்ட பிறகும்கூட முதல்வரின் இருதயத்தால் மீண்டும் இயங்கமுடியவில்லை என்பதால் வேறு வழியின்றி அவரை மீட்க விளையும் மருத்துவ நடவடிக்கைகளை நாங்கள் நிறுத்திக் கொண்டோம் என்று கூறினார். இந்த நடவடிக்கையை சந்தேகத்திற்கு இடமின்றி விளங்கிக் கொள்ள மேலும் சில தகவல்களை அவர் அளித்திருக்க வேண்டும்.

இருதயம் செயலிழந்து போயுள்ளது என்பதை அறிந்த உடன் அடுத்த 20 நிமிடங்களுக்கு CPR நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட து. நின்றுபோன இருதயத்தை மீண்டும் துடிக்கச்செய்வதே CPR நடவடிக்கையின் நோக்கமாகும். 8-10 நிமிடங்களுக்கு மேல் மூளைக்குச் செல்லும் பிராண வாயுவானது தடைபட்டால் மூளைச் சாவு ஏற்படும். இந்த நிலையில் 20 நிமிடங்களுக்கு CPR நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதனைத்


CPR


ECMO

தொடர்ந்து முதல்வர் ECMO கருவியில் இணைக்கப்பட்டார் என்று கூறப்படுகிறது. முதல்வர் அவர்களை ECMO கருவியில் இணைக்க எவ்வளவு நேரம் எடுத்தது? ரத்த நாளங்களுக்குள் ECMO குழாய்களைப் பொருத்த ஆகும் சராசரி நேரமே 32 நிமிடங்கள் என்று சமீபத்திய ஆய்வு ஒன்று கூறுகிறது. அப்படியென்றால் , ECMO கருவி எப்போதிருந்து இயங்கத் தொடங்கியது? இடைப்பட்ட நேரத்தில் முதல்வர் அவர்களைப் பாதுகாக்க என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன?

முதல்வர் அவர்களை (ECMO கருவியுடன் சேர்த்து?) அன்று இரவு 9.30 மணிக்கு அறுவை சிகிச்சை அறைக்குக் கொண்டு சென்றார்கள் என்று செய்தியாளர்கள் சந்திப்பில் Dr.பாலாஜி கூறியிருக்கிறார். எதற்காக அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் Dr.பாபு ஏப்ரஹாம் அவர்கள் பதில் கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

75 நாட்கள் போடப்பட்ட அனைத்து முயற்சிகளும் ஒரு வினாடியில் வீணாகிப் போயின. இதுபோன்ற நிகழ்வு இன்னொருமுறை நிகழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியை அப்போல்லோ நிர்வாகமோ, மதிப்பிற்குரிய இந்த மருத்துவர்களோ எழுப்ப மறந்துவிட்டனர். தீவிர சிகிச்சையில் உலக அளவில் புகழைப் பெற்ற Dr.பீலே அவர்களே இந்தக் கேள்வியை எழுப்ப மறந்துபோனதுதான் ஆச்சர்யம் மற்றும் கவலையை அளிப்பதாக இருக்கிறது. இருதயம் செயலிழந்து போனதற்கான காரணம் என்ன? திடீரென்று செயலிழந்து நின்று போன இருதயத்தை ஏன் மீண்டும் செயல்பட வைக்க இயலவில்லை? உலகத் தரம் வாய்ந்த உபகரணங்களையும், நிபுணத்துவத்தையும் தோல்வியைத் தழுவச் செய்த காரணங்கள் யாவை? என்ற கேள்விகளையே மருத்துவர் பீலேயும், அப்போல்லோ மற்றும் AIIMS மருத்துவர்களும், தமிழக-இந்திய மருத்துவ உலகத்தாரும், தமிழ்நாடு-இந்திய அரசுகளும் கேட்டிருக்க வேண்டும். அதற்கான பதிலைக் கண்டறிய இயன்றளவில் முயற்சியை மேற்கொண்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கான ஒரு சிறிய துரும்பு அளவிலான முயற்சியைக்கூட இவர்கள் எவரும் மேற்கொள்ளவில்லை என்பதுதான் உண்மை.

இறப்பிற்கான காரணங்களை அறிந்துகொள்ள உதவும் செயல்பாடுகளில் முதல் மற்றும் முக்கிய இடத்தைப் பெறுவது மருத்துவ அடிப்படையிலான பிரேதப் பரிசோதனை (Clinical Autopsy) என்ற நடைமுறைச் செயல்பாடு ஆகும். முதல்வர் அவர்களின் இருதயம் திடீரென்று செயலற்றுப் போனதற்கும், அதனை மீண்டும் இயங்கச் செய்ய எடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்வியைத் தழுவியதற்கும் காரணமாக இருந்த பிரச்சினைகளைக் கண்டறிய உறுதுணையாக இருக்கும் செயல்பாடு மருத்துவ அடிப்படையிலான பிரேதப் பரிசோதனைதான் என்பதை Dr.பீலேயும், உலகத் தரம் வாய்ந்த அப்போல்லோ மருத்துவமனை நிர்வாகமும் அறியாததா என்ன? உலகம் முழுவதும் கடந்த இருநூறு ஆண்டுகளாக நடைமுறையில் இருக்கும் செயல்பாடுதானே இது? முதல்வரது உடலைக் கூறுபோடுவதா என்ற வாதத்தை வைப்பவர்களிடம் கடந்த இருநூறு ஆண்டுகளாக இருக்கும் நடைமுறையின் வரலாற்று எடுத்துக்காட்டுகளைத் தீர்க்கமாக எடுத்துக் கூறி அவர்களை இணங்கச் செய்யவைக்க வேண்டியவர்களே இங்கு பேசாமடந்தையாகிப் போனதற்கான காரணம் என்ன?

இறப்பிற்கான காரணங்களை அறிய உதவும் மருத்துவ அடிப்படையிலான பிரேதப் பரிசோதனை என்பது மேலைநாடுகளில் அன்றாடம் மேற்கொள்ளப்படும் நிகழ்வுதான். இந்த நடவடிக்கைக்குப் பிறகும்கூட பிரேதத்தைப் பதப்படுத்தி, அலங்கரித்து நல்லடக்கம் செய்வது அங்கு நித்தம் நிகழும் செயலாகும்.

உண்மை இப்படியிருக்க, முதல்வரின் உடல் மருத்துவ அடிப்படையிலான பிரேதப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை; உட்படுத்தவேண்டும் என்ற கோரிக்கையை உலகத்தரம் வாய்ந்த அப்போல்லோ மருத்துவமனை யோ, முதல்வருக்கு இரவு பகல் பாராது சிகிச்சை அளித்த மருத்துவர்களோ முன்வைக்க வில்லை. என்றாலும்கூட, உயிரற்ற அவரது உடலில் இருக்கும் ரத்தத்தை வெளியில் எடுத்துவிட்டு அதற்குப் பதிலாக அவரது ரத்த நாளங்களிலும், வயிறு-நெஞ்சு-கபாலம் ஆகிய உள்வெளிகளிலும் நச்சுத் தன்மை மிகுந்த வே தித் திரவங்களின் கலவையை ஏற்றி உடலினை வறண்டு-கெட்டுப் போகாமல் இருக்க வைக்கும் செயல்பாட்டினை மேற்கொள்ளவேண்டும் என்ற முடிவு எடுக்கப்பட்ட போது அதற்கான மாற்றுக் கருத்தினை எவரும் முன்வைக்கவில்லை.

அப்போல்லோ மருத்துவமனையில் முதல்வர் அனுமதிக்கப்பட்ட முதல்நாள்தொட்டே அவரது உடல்நிலை மற்றும் அதற்கான சிகிச்சை குறித்தான கவலைகள், சந்தேகங்கள் மற்றும் கேள்விகள் பொதுவெளியில் பலராலும் எழுப்பப்பட்டு வருகின்றன. அவற்றிற்கான தீர்க்கமான, அறிவியல் அடிப்படையிலான, முழுமையான பதில்களை இன்றளவும் அப்போல்லோ நிர்வாகமோ, சிகிச்சை மருத்துவர்களோ, தமிழ்நாடு அரசோ முன்வைக்கத் தவறியுள்ளன என்பதுதான் உண்மை. அப்படிப்பட்ட சூழ்நிலையில், முதல்வரின் உடலைப் பிரேதப் பரிசோதனை க்குட்படுத்தாமல், அதன் ரத்தம் அனைத்தையும் வெளியில் எடுத்துவிட்டு அதற்குப் பதிலாகக் கடுமையான நச்சுத் திரவக் கலவையை உள்ளே செலுத்துவதென்பது அவரது உடலின் உண்மை நிலைமையை அழிக்கும் செயலாக அமைந்துவிடும் என்பது அப்போல்லோ மருத்துவமனை நிர்வாகத்திற்கும், மருத்துவர்களுக்கும் தெரியாதா என்ன? ஒருவேளை, அவரது இறப்பிற்கான காரணத்தை அறிந்துகொள்வதற்காக உடலினைப் பிரேதப் பரிசோதனை செய்தாக வேண்டும் என்ற முடிவினை நீதிமன்றம் எடுக்கும் பட்சத்தில் அடக்கம் செய்யப்பட்ட அவரது உடம்பானது ரத்தம் நீக்கப்பட்டு, கடுமையான நச்சுத் திரவங்களால் அடைக்கப்பட்ட ஒன்றாகத்தானே இருக்கும்? அந்த திரவக் கலவையானது உடலின் அனைத்து இடுக்குகளிலும் புகுந்து உடல் உறுப்புக்களின் இயல்புத் தன்மைகளை அறவே மாற்றி அமைக்கும் திறனைக் கொண்டது என்பதை உறுதி செய்யும் ஆயிரக்கணக்க ான ஆய்வுக்கட்டுரைகள் இருக்கின்றன என்பது அப்போல்லோ நிர்வாகத்திற்கு ம், மருத்துவர்களுக்கும், தமிழக - இந்திய அரசுகளுக்கும் தெரியாதா என்ன?

முதல்வரின் ரத்தத்தை அவரது உடலில் இருந்து வெளியேற்றி அவரது உடல் உறுப்புகளின் இயல்புத் தன்மையை முழுமையாக மாற்றி அமைக்கும் நடவடிக்கையை மேற்கொள்வதற்குப் பதிலாக, அவரது இறப்புக்குக் காரணமாகக் கூறப்படும் இருதய செயலிழப்புக்கான காரணங்களை அறிய உதவிடும் மருத்துவ ரீதியான பிரேதப் பரிசோதனையை நடத்தியிருப்பதுதானே அறிவுகூர்ந்த செயலாக இருந்திருக்க முடியும்? மேற்கத்திய உலகில் நடைமுறையில் உள்ள நிகழ்வுதான் இது என்றாலும் கூட, மேற்கத்திய உலகிற்கும் மருத்துவம் செய்யும் அப்போல்லோ நிர்வாகமோ, மருத்துவர்களோ இந்த நடவடிக்கையை சம்பந்தப்பட்டோர் மேற்கொள்ள வேண்டும் என்று ஏன் நிர்ப்பந்திக்கவில்லை? தமிழக - இந்திய அரசுகள் இந்த நடவடிக்கை கயில்

இருந்து மறைந்த முதல்வர் அவர்களின் பூத உடலைக் காப்பாற்ற ஏன் முயற்சி மேற்கொள்ளவில்லை?

## அப்போல்லோவின் தீவிர சிகிச்சைப் பிரிவில் கண்காணிப்புக் கேமரா இருக்கிறதா?

அப்போல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட முதல்வர் அவர்களின் உடல்நிலை குறித்தும், அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்தும் இன்றுவரை சர்ச்சைகளும், கேள்விகளும் தொடர்கின்றன. அந்த சர்ச்சைகளுக்கும், கேள்விகளுக்கும் இன்றுவரை தமிழக அரசோ, அப்போல்லோ மருத்துவமனை நிர்வாகமோ தீர்க்கமான பதில்களை அளிக்கும் முயற்சிகளை இன்றளவும் மேற்கொள்ளவில்லை என்றே சொல்லலாம். இவ்வாறு எழுந்த சர்ச்சைகளில் ஒன்றுதான் அப்போல்லோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவிலோ அல்லது அந்த மருத்துவமனையின் பிற இடங்களிலோ கண்காணிப்புக் கேமிரா இருக்கிறதா என்ற கேள்வி.

இல்லை என்பதே மருத்துவர்களின் பதிலாக இருக்கிறது. கேமிரா இல்லாத காரணத்தால் முதல்வர் அவர்கள் மருத்துவமனையில் இருந்ததைப் பதிவு செய்த படங்களும் இல்லை என்பது அவர்களின் வாதமாக உள்ளது. மேலும், நோயாளி ஒருவரின் தனிப்பட்ட சுதந்திரத்தில் அவர்களைப் படமெடுப்பதன் மூலம் தாங்கள் நுழைவதில்லை என்றும் கூறுகிறார்கள். ஆனால், அவர்களது வாதம் ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லை.

ஏனெனில், அப்போல்லோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் கண்காணிப்புக் கேமிராக்கள் நிறுவப்பட்டுள்ளன என்பதற்கும், அவை அந்தப் பிரிவுக்குள் நடக்கும் அனைத்தையும் பதிவு செய்கின்றன என்பதற்கும் சமீபத்தைய இரண்டு எடுத்துக்காட்டுக்களை முன்வைக்க முடியும்.

2016 செப்டம்பர் 4 ஆம் தேதி இரவு குஜராத் மாநிலம் அஹமதாபாத் நகரில் Bhat என்ற இடத்தில் உள்ள அப்போல்லோ மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் நடந்த குற்றம் ஒன்றைக் கண்டுபிடிக்க அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கேமிராவில் பதிவாகியிருந்த படங்கள் காவல்துறைக்கு உதவின. டெங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்ட 22 வயதான இளம்பெண் ஒருவர் இந்த மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நோய் முற்றிய காரணத்தால் அவர் அந்த மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவிற்கு மாற்றப்பட்டார். செப்டம்பர் 4 ஆம் தேதியன்று இரவு அங்குப் பணியில் இருந்த மருத்துவர் ஒருவர் அவரது கை-கால்களை வார்டு பாய் துணைகொண்டுக் கட்டிப்போட்டுவிட்டு மானபங்கம் செய்துள்ளார். இந்த நிகழ்வினை அந்தப் பிரிவில் இருந்த கண்காணிப்புக் கேமிரா பதிவு செய்திருக்கிறது. பதிவான படத்தின் அடிப்படை யில் அந்த மருத்துவர் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டார். ( http://ahmedabadmirror.indiatimes.com/ahmedabad/cover-story/22-year-old-dengue-patient-accuses-doc-of-raping-her-in-ICU/articleshow/54112888.cms )

அப்போல்லோ மருத்துவமனையின் வலைத் தளத்திலேயே அதன் தீவிர சிகிச்சைப் பிரிவில் கண்காணிப்புக் காமிராக்கள் பொருத்தப் பட்டிருக்கின்றன என்ற தகவல் உள்ளது. அந்த வலைத் தளத்திற்கு இந்த இணைப்பில் இருந்து செல்லலாம்:

https://www.apollohospitals.com/patient-care/value-added-services/virtual-icu-visit



Apollo HOSPITALS

APOLLO LIFELINE NATIONAL : 1860-500-1066

Hospital Locations, Clinics and Pharmacies...

Organization Accredited by Joint Commission Internationa
Locations at Delhi, Chennai, Hyderal
Ahmedabad, Bangalore, Kolkata
and Dhaka are JCI accrediattion

PATIENT CARE CENTRES OF EXCELLENCE PROCEDURES INTERNATIONAL PATIENTS CORPORATE EDUCATION RESEARCH LOCAT

Home > Patient Care > Value added services > Virtual ICU Visit

VALUE ADDED SERVICES
Virtual ICU Visit

**Virtual Visits to ICU from Anywhere in the World!!**

In a first of its kind initiative, Apollo Telemedicine Networking Foundation Chennai has introduced virtual visits to the ICU from anywhere in the world. An ICU admission is an extremely traumatic event for the patient as well as for their near and dear. To ensure maximum clinical care and to reduce the chances of infection, physical visits to ICU's by relatives and friends are kept to the absolute minimum. It is also impractical for the primary consultant to make repeated physical visits to the ICU, in order to review the patients. The family would like a status report directly from the primary consultant in the presence of the patient. In an ICU setting sometimes, this is not possible.

I-SEE-U™
ICU
Apollo

The I-SEE-U™ facility has been designed with this in mind, to enable virtual Visits to individual ICU cubicles, both by consultants, relatives and friends using internet, through a PC, laptop and even a smart phone. The patient's authorized relatives and friends can now virtually "SEE" an ICU patient by remotely switching on a camera installed over the ICU bed. Elaborating the functionality.Prof K.Ganapathy, President, ATNF pointed out that using very simple user friendly Pan,Tilt, Zoom and other functions of the camera, ECG wave forms and all Virtual ICU readings on all monitors could be remotely seen with much clarity.

Consultants can use this facility to make additional virtual visits 24/7 and remotely re-evaluate the patient in great detail. This facility would particularly be useful to NRI's living abroad, who wish to actually see betterment in their near and dear in ICU. The consultant during a physical visit can also virtually interact with the relatives who will be in the Virtual Visit Room.

Virtual Visit by Doctor

மருத்துவமனையின் கேமிராக்களில் முதல்வரின் படங்கள் பதிவாகியுள்ளனவா இல்லையா என்பது குறித்த உண்மையை இனிமேலாவது அப்போல்லோ நிர்வாகம் வெளியிடுமா?

## ஏன் இந்த அவசரம்?

### முதல்வரின் உடல் பதப்படுத்தப்பட்டதன் மீது எழும் கேள்விகள்

2016 டிசம்பர் 5 ஆம் தேதியன்று இரவு 11.30 மணிக்கு முதல்வர் ஜெயலலிதா அவர்கள் மரணமடைந்தார் என்று அப்போல்லோ மருத்துவமனை அறிவித்தது. அதனை அடுத்த ஐந்து நிமிடத்தில் (இரவு 11.35 மணி) தமிழக அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் மற்றும் செயலாளர் ஆகியோர் சென்னை மருத்துவக் கல்லூரியின் உடற்கூறு இயல் துறையின் தலைவரான Dr.சுதா சேஷய்யன் அவர்களிடம் முதல்வர் மரணமடைந்து விட்டார் என்றும் அவரது உடலை உடனடியா கப் பதப்படுத்தியாக வேண்டும் என்றும் அதற்காக அவர் அவரது பணியாளர்களுடன் அப்போல்லோ மருத்துவமனைக்கு விரைய வேண்டும் என்றும் கூறியுள்ளனர். Dr.சுதா சேஷய்யனும் அவரது பணியாளர்களும் அடுத்த 45 நிமிடங்களில் இந்தப் பணியைத் தொடங்கியுள்ளார்கள்.

6 ஆம் தேதியன்று அதிகாலை 12.20 மணிக்கு முதல்வரின் உடலைப் பதப்படுத்தும் பணி துவங்கியது. வலது தொடையில் உள்ள ஃபெமோரல் தமணியின் வாயிலாக அவர்கள் 5.5 லிட்டர் பதப்படுத்து ம் திரவத்தினை உடலுக்குள் செலுத்தினர். இதற்காக அவர்கள் தானியங்கி பம்ப் ஒன்றை உபயோகித்தனர். இந்தப் பணி அடுத்த 15 நிமிடங்களில் - அதாவது, செப்டம்பர் 6 ஆம் தேதி அதிகாலை 12.35 மணிக்கு - முடிவுக்கு வந்தது. வழக்கமாகப் பயன்படுத்தும் உடல் பக்குவத் திரவத்தினை (embalming fluid) முதல்வரின் தோல் நிறத்தை மனதில் கொண்டு சற்று மாற்றி அமைக்க Dr.சுதா முடிவு செய்தார். 5.5 லிட்டர் திரவத்தில் 2.5 லிட்டர் அளவிற்கு ஃபார்மலின் திரவத்தையும், கூடுதலாக ஐசோ புரோப்பைல் ஆல்கஹாலையும் கலந்தது இதற்காகத்தான் என்று கூறினார். ரத்தக் குழாய்களைத் தவிர, நெஞ்சு - வயிறு - கபாலம் ஆகிய உள்வெளிகளிலும் இந்த உடல் பக்குவத் திரவத்தை செலுத்த வேண்டும் என்பது நியதி. ஆனால், அவ்வாறு செலுத்தப்பட்டதா என்பது பற்றி 6 பிப்ரவரி 2016 அன்று தமிழக அரசால் கூட்டப்பட்ட செய்தியாளர்கள் சந்திப்பில் பேசியபோது அவர் தெளிவுபடுத்தவில்லை ல. முதல்வர் அவர்களின் இடது கன்னத்தில் காணப்பட்ட நான்கு புள்ளிகளுக்க ான காரணம் என்ன என்பதையும் அவரால் விளக்க முடியவில்லை.

முதல்வர் அவர்களின் எடை 105 கிலோ என்று கூறப்படுகிறது. இந்த எடையைக் கொண்ட ஒருவருக்குத் தேவைப்படும் பதப்படுத்தப்படும் திரவத்தின் அளவு என்ன? வெறும் 5.5 லிட்டர் திரவத்தால் இது சாத்தியம்தானா?

முதல்வரின் உடலைப் பக்குவப்படுத்தும் செயலைத் தொடங்கும் முன்பு அதற்கான விண்ணப்பப் படிவம் யாரிடம் பெறப்பட்டது என்பது பற்றியோ, காவல்துறையிடமிருந்து 'இந்த உடம்பைப் பதப்படுத்துவதற்கு ஆட்சேபனை ஏதும் இல்லை' என்பதற்க ான சான்றிதழ் வாங்கப்பட்டதா என்பது குறித்தோ, மருத்துவமனை யில் இருந்து இறப்புச் சான்றிதழ் அளிக்கப்பட்ட தா என்பது குறித்தோ, மருத்துவ அடிப்படையிலான பிரேதப் பரிசோதனை நடத்த அப்போல்லோ நிர்வாகத்திற்கும், தமிழக அரசிற்கும் எண்ணம் ஏதேனும் உள்ளதா என்பது குறித்து அவர் தன்னைத் தெளிவு படுத்திக் கொண்டாரா என்பது பற்றியோ அவர் ஏதும் பேசவில்லை. முதல்வரின் உடல் எவ்வாறு அடக்கம் செய்யப்பட உள்ளது என்பது பற்றியும், எத்தனை நாட்களுக்கு அது பொதுமக்கள்

பார்வைக்கு வைக்கப்பட இருக்கிறது என்பது பற்றியும் சிந்தித்து அதற்கேற்ற உடல்பக்குவ திரவத்தை அவர் தேர்வு செய்தாரா என்பது பற்றியும் அவர் செய்தியாளர்கள் சந்திப்பின்போது தெளிவு படுத்தவில்லை. இறந்தவர் ஒருவரின் உடலைப் பக்குவப்படுத்தும்போது அவர் என்ன காரணத்தால் இறந்தார் என்பதை பக்குவப்படுத்தும் குழுவினருக்கு மருத்துவமனை நிர்வாகம் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும் என்பது நியதி. ஏனெனில், மரணமடைந்தவர் கடுமையான நோய்த்தொற்றால் பாதிக்கப்பட்டிருந்தால் அவரது ரத்தம் மற்றும் உடலில் இருக்க வாய்ப்புள்ள கிருமிகளால் பக்குவப்படுத்தும் பணியினை மேற்கொள்பவர்கள் பாதிப்புக்கு உள்ளாக முடியும். முதல்வர் அவர்களின் ரத்தத்தில் கலந்திருந்த நோய்த்தொற்று குறித்து அப்போல்லோ மருத்துவர்கள் Dr.சுதா சேஷய்யனிடம் விளக்கினார்களா என்பது குறித்தும் அவர் எதுவும் பேசவில்லை. முதல்வரின் ரத்தம் முழுவதையும் வெளியேற்றிவிட்டு அதற்குப் பதிலாக உடலைப் பதப்படுத்தும் நச்சுத் திரவத்தை அவரது உடலுக்குள் செலுத்தும் பணியை Dr.சுதா சேஷய்யன் குழுவினர் அப்போல்லோ மருத்துவமனையில் எங்கு மேற்கொண்டார்கள் என்பது குறித்தும் அவர் தகவல் தெரிவிக்கவில்லை.

இறந்தோரின் உடல் இரண்டு காரணங்களுக்காகப் பக்குவப்படுத்தப் படுகிறது. அடக்கம் செய்வதற்கு முன்பாகவே அந்த உடம்பு கெட்டுப்போய்விடக்கூடாது என்பது ஒரு காரணம். உடற்கூறு கல்விக்காக நீண்டகாலம் பதப்படுத்த வேண்டியது மற்ற காரணம். முதலாவது காரணத்திற்காகவே முதல்வரின் உடல் பக்குவப்படுத்தப் பட வேண்டியிருந்தது என்று Dr.சுதா சேஷய்யன் குறிப்பிடுகிறார்.

அடுத்த 19 மணி நேரத்திற்குள் அடக்கம் செய்யப்படவுள்ள, இரண்டு கம்ப்ரெஸ்ஸர்களைக் கொண்ட சிறப்பு குளிர்சாதன சவப் பெட்டியில் வைக்கப்படவுள்ள ஒரு உடலினைப் பதப்படுத்த வேண்டியது அவசியம்தானா என்ற கேள்வியை அவர் எழுப்பினாரா?

முதல்வர் அவர்கள் ஐயங்கார் இனத்தை சார்ந்தவர் என்பதால் அவரது உடல் எரியூட்டப்படுவதே மரபு. அப்படி இருக்கும்போது அதற்கேற்ற பதப்படுத்தும் வேதிப்பொட்களை தேர்வு செய்யாமல், எளிதில் வெடிக்கும் தன்மை கொண்ட Iso propyl alchohol ஐ உடலைப் பதப்படுத்தும் திரவத்தில் கலந்ததற்கான காரணம்தான் என்ன?

முதல்வர் அவர்களின் தோலின் நிறத்தை நாள் முழுதும் குன்றாமல் வைக்கவேண்டுமென்றால், அதற்கான சிறப்பு பதப்படுத்தும் திரவங்கள் அனேகம் உள்ளனவே... அவற்றையெல்லாம் பயன்படுத்தாமல் மிகவும் விலை குறைந்த, மலிவான வேதிப்பொருள் ஒன்றை அவர் தேர்வு செய்தது எதற்காக?

உடலைப் பதப்படுத்துவதற்குக் குறைந்தது 3-4 மணி நேரமாவது தேவை. மிக விரைவில் அதனை முடிக்க வேண்டும் என்றால்கூட குறைந்தது ஒரு மணி நேரமாவது அவசியமாகும். உடலைப் பதப்படுத்தக் கோரும் விண்ணப்பப் படிவத்தை சரிபார்க்க வேண்டும். உடலைப் பதப்படுத்தும் திரவத்தை ரத்த நாளங்களுக்குள் செலுத்துவதற்கு முன்பாக ரத்தத்தை வெளியேற்ற வேண்டும். பின்னர் வயிறு, நெஞ்சு மற்றும் கபால உள் வெளிகளுக்குள்ளும் திரவத்தை செலுத்த வேண்டும். இவை அனைத்தையும் பணியாளர்களுக்குக் கேடு ஏற்படாத வண்ணம் செய்துமுடிக்க வேண்டும். திரவத்தினை உடலுக்குள் ஏற்றிய பிறகு அது எங்காவது கசிகிறதா என்று பார்க்க வேண்டும். பின்னர் அந்த உடம்பினை சுத்தம்

செய்து, அடக்கத்திற்குத் தயார் செய்பவர்களிடம் ஒப்படைக்க வேண்டும். இத்தனை செயல்பாடுகளையும் வெறும் 15 நிமிடங்களில் முடித்து விட்டதாக அவர் கூறுகிறார்.

ஏன் இந்த அவசரம்?

## மக்களும், முதல்வரின் உடல்நிலையும்

ஒரு மாநிலத்தின் முதல்வரது உடல்நிலை குறித்தும், அவருக்கு அளிக்கப்பட்ட சிகிச்சை குறித்தும் உள்ள தகவல்களை அறிந்து கொள்வதற்கான உரிமை அந்த மாநிலத்தின் மக்களுக்கு உண்டு. அவரது உடல்நிலை குறித்த தகவல்கள் அவரின் தனி நபர் சுதந்திரத்தையும் தாண்டி அனைத்து மக்களையும் பாதிக்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றன. அவற்றை மறைக்க முயலும் ஒவ்வொரு செயலும் பொது மக்களுக்கு அரசு ஆற்றும் சேவையை மாற்றியமைக்கும், மடைமாற்றும் திறனைக் கொண்டிருக்கிறது. தகவல்கள் பொதுவெளியில், வெளிப்படையாக வைக்கப்படும்போதுமட்டுமே அந்தத் தகவல்களில் இருக்கும் தவறுகளை அறிந்து கொண்டு களைய முடியும்.